# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 10 | 24-03-2003 | திங்கட்கிழமை | ஓசை 34



வவுனியா நகரில்
வசந்தம் வீசும்
புடைவை உலகில் உங்களின்
நட்புக்கு.....
சாந்தா ரெக்ஸ்
பஜார் வீதி, வவுனியா
T.P:24-22879


## நவீன உலகின் வளர்ச்சிக் கேற்ப எமது மக்களும் வளரவேண்டும்!

### தலைவரின் எதிர்பார்க்கை இதுவே என்கிறார் தங்கன்

இன்றைய நவீன உலகத்தின் வளர்ச்சிக்கேற்ப நாமும் எமது மக்களும் முன்னேறவேண்டும் என்பதே எமது தலைவரின் எதிர்பார்ப்பாகும். அதற்காகவே இங்கே தமிழீழ கல்விக்கழகம் மாணவர் அமைப்பு எனப் பல துறைகள் செயற்படுகின்றன என தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்லூரி கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் சஞ்சிகை இரண்டு நாட்களாக நடத்திய கருத்தமர்வின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கன் தெரிவித்தார்.

கணினி என்பது இன்று உலகை அனைத்து வழிகளிலும் ஆக்கிரமித்துள்ளது. எமது போரியல் களங்களிலும் நாம் கண்ட வரலாற்று வெற்றிகளிலும் கணினியின் செயற்பாடுகள் முக்கியத்துவம் வகித்துள்ளன. இதனாலேயே எமது போராளிகளுக்கும் நாம் கணினி தொடர்பான அறிவை வளர்த்து வருகின்றோம். வன்னி மண்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் திருமலையில் புலிகளைச் சந்திப்பு

(திருமலை)

இலங்கை யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழுத்தலைவர் ரெலவ்சன் கடந்த வெள்ளியன்று இரவு திருகோணமலையில் விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பில் திருகோணமலை மாவட்டத் தளபதி கேணல் பதுமன், திருமலைமாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் ஆகியோர் பங்கேற்றனர். இச்சந்திப்பில், திருமலையில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் நடமாட்டம் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேஜர் ஜெனரல் ரெலவ்சன் சிறிலங்கா விமானப்படை விமானம் மூலம் சீனன் குடா விமானப் படைத்தளத்திற்குச் சென்று அங்கு முப்படைகளினதும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை ஒரேநாடாக இருக்க வேண்டும்; கொழும்பில் பௌத்தபிக்குகள் ஊர்வலம்!



### பேரினவாதக்கட்சிகளும் பங்கேற்பு

**பௌத்தத்தை அரச மதமாகக் கொண்ட இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டுமென வலியுறுத்தி பௌத்தபிக்குகள் நேற்று முன்தினம் ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர். ஜாதிக சங்க சம்மேளனம் என்னும் அமைப்பால் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஊர்வலத்தில் சிங்கள தேசியக்கட்சி, சிகல உறுமய என்பனவும் பங்கேற்றன.**

கொழும்பு விகாரமாதேவி பூங்காவிற்கு அண்மையிலுள்ள புத்தர் சிலைக்கு முன்பிருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகியது.

எல்லாவல மெதான தேரோ உட்பட பல முக்கிய பிக்குகள் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றியோர் அரசியலமைப்பில் செய்யப்படும் மாற்றங்கள் மகாசங்கத்தைத் திருப்திப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினர்.

இக்கூட்டத்தில்: அநுராதபுரம் தேசிய தலைநகராக இருக்க வேண்டும். ஜுன் மாதத்தில் வரும் பௌர்ணமி தினம் தேசிய தினமாக இருக்க வேண்டும். தேசத் தந்தை துட்டகைமுனு, தேசத்தின் தாய் மகாராணி விகார மாதேவி ஆகிய தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

- நோர்வே இலங்கைக்கு -

## 3 மில்லியன் டொலர் நிதி வழங்கி நிதி உதவியை ஆரம்பிக்க முடிவு

(லண்டன்)

சிறிலங்காவிற்கு உதவி வழங்குமாறு உலக நாடுகளை தாம் கோரவுள்ளதாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் கூறியுள்ளார்.

மூன்றுமில்லியன் டொலரை வழங்கி நிதி உதவியை தாங்கள் அடுத்தவாரம் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் விதார் கெல்ஹேசன் கூறியுள்ளார்.

ஈராக் மீதான போர் ஆரம்பமாகியுள்ளதனால் சிறிலங்காவிற்கான நிதி உதவியில் பாதிப்பு ஏற்படலாம் என்ற சூழ்நிலையில் உலக நாடுகளிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்படவுள்ளது.

## அன்ரன்பாலசிங்கம் -பீரிஸ் லண்டனில் சந்தித்துப் பேசுவர்

(லண்டன்)

சிறிலங்காவின் சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான ஜீ.எல். பீரிஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள் ளார்.

சமாதான முயற்சிகளை வேகமாக முன்னெடுத்துச் செல்வதற்காக முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்வதற்காகவே இருவரும் லண்டனில் சந்தித்துப் பேசுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாநகர வளாகத்தில் முகாம் அமைக்க படையினர் எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான மாநகர சபை வளாகம் சுப்பிரமணியம் பூங்கா அமைந்துள்ள காணிகளை சுவீகரித்து அதில் படைமுகாங்களை அமைக்கும் அரசின் முயற்சிகளை யாழ். மாவட்ட அரச சார்பற்ற இணையம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளிடம் அரச சார்பற்ற இணையப் பிரதிநிதிகள் முறைப்பாடு செய்துள்ளனர். இதற்கு எதிராக நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நாளை மாலை 4.00 மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்கத்தின் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

யாழ். குடாநாட்டு மக்களினது குடியியல் உரிமைகளுக்குப் பாதகமாக அமையப்போகும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் நினைவுக்கல் நாட்டலும்

(அலுவலக செய்தியாளர்)

10.03.2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் கடற்படையினரால் வணிகக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதில் வீரச்சாவடைந்த ஏபிள் சீமன் இளம்பருதி - (கிருஸ்ணன் ஜெந்தன் - அளவெட்டி வடக்கு த.மு:- நட்டாங்கண்டல் மல்லாவி) என்ற மாவீரனின் திருவுருவப் படம் அவரது இல்லத்தில் இருந்து இன்று காலை 10.00 மணிக்கு எடுத்து வரப்பட்டு மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக பாண்டியன்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்று. பின் வன்னி விளாங்குளம் மாவீரர்துயிலும் இல்லத்தில் மாலை 2.00 மணியளவில் நினைவுக்கல் உரிய இராணுவ மரியாதையுடன் பெற்றோரால் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது. (சோ.லோ)

## வரி விளம்பரம்

### உயர்கல்வி வாய்ப்பு

கனடா நாட்டின் ரொறொன்ரோ நகரில் கம்பியூட்டர், முகாமைத்துவம் என்பவற்றில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள். A/L இல் சித்தி போதுமானது. விபரங்களுக்கு: 140, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொலை. பே. இல. 2222478. (3026)

### துவறிவிட்டது

சுந்தரமூர்த்தி திருமூர்த்தி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (770290210X) University I.Cயுடன்(சிவப்பு நிறம்) 21.03.2003 அன்று ஜெயபுரத்தில் இருந்து பேருந்தில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி, ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.(3040)

### துவறிவிட்டது

க.கதிர்காமு 2ஆம் வட்டாரம் கோம்பாவில் புதுக்குடியிருப்பு என்பவரது குடும்ப அட்டையும் திருமதி. கதிர்காமு தவமணிதேவி என்பவரது அ.அட்டையும் புதுக்குடியிருப்புக்கும் உடையார் கட்டுக்கும் இடையில் 20-03-2003அன்று தவறிவிட்டது.

இதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (2813)


# நூல் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

க.பொ.த உயர்தரம், கலைமுதல் தேர்வு, கலைமாணி, நெறி பயிலும் மாணவருக்கான "இந்து நாகரிகம்" என்னும் நூல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கிளி.கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆசிரியர் செ.சிவஞானம் அவர்களால் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலினைக் கிளிநொச்சி திருநெறிக்கழகம் வெளியிட்டு வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# 80 மரண தண்டனைக் கைதிகள்

(கொழும்பு)

கண்டிபோகம்பர சிறைச்சாலையில் 80 மரண தண்டனைக் கைதிகள் இருந்து வருவதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

போகம்பர சிறைச்சாலையின் வருடாந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இச்சிறைச்சாலையில் ஒரே நேரத்தில் நூறு கைதிகளை தூக்கிலிடும் வசதி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# மே மாதத்திற்கு பிற்போடப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)


சகல கல்விப்பணிமனைகளிலும் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெறவிருந்த அடிப்படைக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மெல்லக்கற்கும் மாணவர் நிலையறி பரீட்சையினை நடாத்துவதற்குரிய பரீட்சையாளர்களுக்கான பயிற்சி நடைபெறவில்லையெனவும்,

மேற்படி நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமாக நிர்வாகத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமையின் காரணமாக இப்பயிற்சி மே மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளதெனவும் ஜி.ரி.இசற் வேப் திட்ட முகாமையாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார். (சோ)

# மாவீரர் சுடரின் நினைவுக்கல் முள்ளியவளையில் திரைநீக்கம்

10.03.2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் வீரச்சாவடைந்த மாவீரர் சுடரின் திருவுருவப்படம் கடந்த வெள்ளியன்று பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து முல்லைத்தீவு மாவீரர் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி வீரவணக்க நிகழ்வு இடம்பெற்றது.

கடற்புலிகளின் முல்லைத்தீவுப் பிரதேசப் பொறுப்பாளர் அரவிந்தன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது. கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரங்கன் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தார். ஈகச்சுடரினை மாவீரர் சுடரின் தாயார் ஏற்றிவைத்தார். திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை சுடரின் சகோதரி அணிவித்தார். சிறப்புரைகளை கடற்புலிப் போராளி மதிவாணன், முல்லைத்தீவு உதவிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம் பங்குத்தந்தை ஜோன் ஜோசப் ஆகியோர் நிகழ்த்தியதைத் தொடர்ந்து சுடரின் திருவுருவப் படம் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்திற்கு, அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப் பட்டது. அங்கு இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது.



திருமலையில் 11 மாவீரர்களுக்கும் அஞ்சலி

# சமாதானத்தை எதிர்க்கும் சக்திகளுக்கெதிராக சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

சமாதான விரோத சக்திகளுக்கு எதிராக மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருக்கும் சத்தியாக்கிரகப் போராட்டம் வரும் ஐந்தாம் திகதி காலி முகத்திடலில் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மலையக மக்கள் முன்னணியின் கொழும்புக் கிளைக் கூட்டத்தில் பல்வேறு தரப்பினரது கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சமாதான சக்திகளைப் பலப்படுத்தவும், சமாதானத்தை எதிர்க்கும் சக்திகளைக் கண்டிக்கவுமாக இந்தச் சத்தியாக்கிரகம் நாடு முழுவதும் நடத்தப்படவுள்ளது.

# வட, கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள் இன்று மறியற் போராட்டம்

(அலுவலக செய்தியாளர்)

வடக்குகிழக்கு தொண்டர் ஆசிரியர்களும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி மறியற்போராட்டம் நடத்தவுள்ளனர்.

இன்று வடக்கு கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள் ஏற்கனவே எடுத்த முடிவுகளின் படி வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் இன்று அந்தந்த வலயக் கல்வித்திணைக்களங்கள் முன்பாக மறியற் போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் அடுத்து இதே போன்று மறியற் போராட்டம் ஒன்றினை வடக்கு கிழக்கு கல்வியமைச்சு செயலகத்தின் முன்பாகவும் நடத்தவுள்ளார்கள் என வடக்கு கிழக்கு தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (பா)

# 94500 மிதிவெடிகள், 71000 வெடிபொருட்கள் ம. நே. க. பிரிவினால் அகற்றல்

(அலுவலக செய்தியாளர்)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கடந்த வருடம் 94500 மிதிவெடிகளும் 71000 வெடி பொருட்களும் அகற்றப்பட்டுள்ளன.

இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருபது லட்சத்துக்கு மேல் மிதிவெடிகள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் தாளையடிப்பகுதியில் வைத்து 3702 மிதிவெடிகளும் 1587 பாரிய வெடி பொருட்களும் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் முன்னிலையில் வைத்து தகர்த்தழிக்கப்பட்டுள்ளன என புனர்வாழ்வுச் செய்திக் குறிப்பொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (பா)

# இலங்கை செஞ்சிலுவைச்சங்க வருடாந்த ஒன்றுகூடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்க வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் , இலங்கை செஞ்சிலுவைச் சங்கங்களின் இணைப்பாளர் சித்திரவேல் , சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் தோமஸ்கால்சன், சுஜான்ரேலர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளி.மாவட்ட செயலர் க.கணேஸ், மாங்குளம் இலங்கை வங்கி முகாமையாளர் சந்திரன், கரைச்சி கிழக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் புவனேஸ்வரன், டாக்டர் கே.வி.கே.திருலோகமூர்த்தி, ஆசிரியர் அபராஜன், ஓய்வுபெற்ற அதிபர் அ.கனகரத்தினம் மற்றும் பலரும் கலந்து உரை நிகழ்த்தினர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி உரை நிகழ்த்துகையில், கிளி. மாவட்ட செஞ்சிலுவைச்சங்க 16 இடங்களில் மேற்கொண்டுவரும் நடமாடும் மருத்துவசேவையினை நேரில் பார்வையிடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவர்களின் சேவை என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்திவிட்டது. இவர்கள் மேற்கொண்டுவரும் முன்பள்ளிச் செயல்திட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இலங்கைக்கு வருகைதந்த இரு வாரத்தில் இங்கு வருகை மேற்கொண்டு இந்நிறுவனத்தினால் திறம்பட மேற்கொள்ளப்பட்டுவரும் செயல்திட்டங்களைப் பார்வையிடும் சந்தர்ப்பம் கிட்டியதையிட்டு பெருமைப்படுகின்றேன் என்றார். நன்றியுரையினை நடராசா நிகழ்த்தினார். (சோ)

## -மீளக்குடியேற்றக் கொடுப்பனவை-

# முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான மீள் குடியேற்ற கொடுப்பனவுகள் வழங்குவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் நேற்று பரந்தன் ம/வி யில் கண்டாவளை பிரதேசச் செயலர் மத்தியாஸ் தலைமையில் பரந்தன் பிரதேச ஊரகக்குழுத்தலைவர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் கணவனை இழந்தவர்கள், அங்கவீனர்கள் குடும்பத்தில் குடும்ப எண்ணிக்கை கூடியவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் முன்னுரிமைப்படுத்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதென தீர்மானிக்கப்பட்டது.

துரிதகதியில் இந்நடவடிக்கையினைமேற்கொள்வதற்கு பரந்தன் பிரதேச ஊரகக்குழுவின் குமரபுரம் கிராமத்திற்கு ப.நாகேந்திரம், பெரிய பரந்தன் கிராமத்திற்கு சி.சிவபாதசுந்தரம், உமையாள்புரத்திற்கு கண்ணன், பரந்தன் கிராமத்திற்கு பொன்னம்பலம் ஆகியோர் அந்தந்த கிராமத்திற்கு ஊரகக்குழுத் தலைவராக தெரிவு செய்யப் பெற்றுள்ளனர். (சோ)

# வேலையற்ற பட்டதாரிகள் அ.புரத்தில் ஆர்ப்பாட்டம்

(அநுராதபுரம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் பெற்றுக் கொடுக்கும் தேசியக் கொள்கை ஒன்றை உடனடியாக உருவாக்கக் கோரி வடமத்திய மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அநுராதபுரத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மேலும் உடனடியாக தங்களுக்கு தொழில்வழங்க அரசு முன்வரவேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததற்கு ஆட்சேபனை தெரிவித்து அநுராதபுரம் நூலகத்திற்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் நேற்று ஒன்பதாவது நாளாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் தூசி மண்டலத்தால் சிரமம்

பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் அதிகரித்த வாகனப் போக்குவரத்துக் காரணமாகவும் சாரதிகள் போட்டிபோட்டு வாகனங்களைச் செலுத்துவதாலும் பெருமளவு தூசி அள்ளி வீசப்படுகிறது. இதனால் வீதியால் செல்கின்ற மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்கின்றார்கள். அதுமட்டுமன்றி வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன. இவ்வாறு எழும் தூசியால் வீதி ஓரத்தில் காணப்படும் விற்பனை நிலையங்கள் மற்றும் வீடுகளிலும் தூசி புகுந்து பெரும் சிரமத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் மக்கள் பெரும் கவலை அடைந்திருக்கின்றனர். அத்துடன் வீதி ஓரத்தில் காணப்படும் மரங்கள், விவசாயப் பயிர்களின் இலைகள் யாவும் சிவப்பாகவே காட்சி தருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (லோ)

# ஈராக் படைகள் கடும் எதிர்த்தாக்குதல்; பஸ்ரா நகர்நோக்கிய நகர்வு நிறுத்தம்!

## விமான, ஏவுகணைத் தாக்குதல்கள் அதிகரிப்பு

**பஸ்ரா நகரை நோக்கி முன்னேறிய அமெரிக்க, பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் ஈராக்கிய படைகள் நேற்று நடத்திய கடுமையான எதிர்த்தாக்குதலால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. அத்தோடு, கடுமையான இழப்பையும் அப்படைகள் சந்தித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இந்நிலையில், பஸ்ரா நோக்கிய நகர்வு கைவிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**

ஈராக் படையினர் அமெரிக்கப்படையினர் மீது திடீர் தாக்கு தலை நடத்தி உள்ளனர்.

பஸ்ரா நகரில் அமெரிக்கப் படையினருக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்ததால் அவை பஸ்ரா நகரை விட்டு விலகியிருப்பதாக அமரிக்கப் படைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நசீரியா நகரைச் சுற்றிலும் அமெரிக்க படையினருடன் கடுமையான மோதலில் ஈராக் படையினர் ஈடுபட்டுள்ளனர் என ஈராக் தகவல்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

ஈராக் இராணுவத்தினர் அமெரிக்காவின் 16 டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களைத் தாக்கி அழித்துள்ளனர்.

பஸ்ரா – ருமெல்லா போன்ற இடங்களில் அமெரிக்கப் படையின் நான்கு வாகன அணிகளை முன்னேறவிடாமல் தடுத்து நிறுத்தி உள்ளதாகவும், அமெரிக்க குறூஸ் ஏவுகணைகள் 21ஐ தடுத்துவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், பஸ்ரா நகரில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளைச் சரிப்படுத்தும் வகையில் ஈராக்கின் ஏனைய பகுதிகள் மீது குறிப்பாக பாக்தாத் மீதும் விமான மற்றும் ஏவுகணைத்தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத் நகரின் மீது நேற்று அதிகாலை அமெரிக்க பிரிட்டிஷ் விமானங்கள் அதிகளவு குண்டுகளை வீசி தாக்குதலை நடத்தி உள்ளன.

ஈராக்கின் வடக்குப் பகுதி நகரமான மோவான் மீதும் விமானக் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

குவைத்தின் வடக்குப் பகுதியில் அமெரிக்க பின்னணி முகாம் குண்டு வீசித் தாக்கப்பட்டதில் 13 அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ளனர்.


இதேவேளை பாக்தாத் மற்றும் பஸ்ரா நகரங்களின் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய விமானக்குண்டு வீச்சில் 150 பேர் பலியாகி உள்ளனர்.

பாக்தாத் மீதான தாக்குதலில் குறைந்தது நூறு பேரும் பஸ்ரா மீதான தாக்குதலில் குறைந்தது ஐம்பது பேரும் பலியாகி உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதி சதாம் ஹுசைனின் பாத் கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர் இத்தாக்குதல்களின் போது பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஈராக்கில் தாக்குதலுக்குள்ளான உல்லாச விடுதி தொடர்மாடி ஒன்றினூடாக வெளியேறும் ஈராக்கியர்கள்.



பிரிட்டனின் B-52 ரக குண்டுவீச்சு விமானம் போர்முனைக்குப் புறப்பட ஆயத்தமாகிறது.



ஈராக்கிய தலைநகர் பாக்தாத்தில் குண்டுவெடிப்புகளினால் எழும்பும் புகைமண்டலம்.



குண்டு மழைக்கிடையில் பாக்தாத்தில் குடும்பம் ஒன்று தமது வீட்டின் நிலவறைக்குள் பதுங்கியிருக்கிறது.

# அமெரிக்கப் படையினரின் தாக்குதலை திறமையாக எதிர்கொள்கின்றோம்

## –ஈராக் சனாதிபதி அறிவிப்பு

(பாக்தாத்)

அமெரிக்க பிரிட்டிஷ் படைகளின் தாக்குதலை ஈராக்கியப் படைகள் திறமையாக சமாளித்து வருகின்றன என்று ஈராக்கிய அதிபர் சதாம்ஹுசைன் தெரிவித் துள்ளார்.

உயரதிகாரிகளின் கூட்டம் ஒன்றிற்கு தலைமை தாங்கி அவர் உரையாற்றினார். அவ்வேளையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளை எதிர் கொள்ள எழுபது இலட்சம் ஈராக்கியர்கள் ஆயுதங்களுடன் தயாராக உள்ளனர் என ஈராக்கிய வெளி விவகார அமைச்சர் தெரிவித் துள்ளார்.

ஈராக்கை ஆக்கிரமிக்க முயற்சிக்கும் அமெரிக்கப் படைகள் மோசமான விளைவுகளைச் சந்திக்கப் போவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதே வேளை ஈராக்கின் முக்கிய நகரங்களுக்குள் நுழைவதற்கு முயன்ற அமெரிக்கத் தலைமையிலான கூட்டணிப் படைகள் விரட்டியடிக்கப்பட்டுள்ளதாக ஈராக்கின் தகவல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### ஈரான் மீதும் தாக்குதல்!

அமெரிக்கா ஈராக் மீது நடத்திய ஏவுகணைத் தாக்குல்களில் சில ஏவுகணைகள் ஈரான் மீது வீழ்ந்து வெடித்துள்ளன.

ஆயினும் இத்தாக்குதலால் ஈரானுக்கு ஏற்பட்ட சேதவிபரம் பற்றித் தெரியவரவில்லை.

அமெரிக்கா செலுத்திய ஏவுகணைகள் தவறுதலாக ஈரான் மீது வீழ்ந்து வெடித்தமைக்கு ஈரான் நாட்டிடம் அமெரிக்கா மன்னிப்புக்கோரியுள்ளது.




அமெரிக்காவின் சான்பிரான்ஸ்ஸிஸ்கோ நகரில் நகர மண்டபத்துக்கண்மையில் யுத்த எதிர்ப்புப் பேரணி ஒன்று அணிவகுக்கின்றது.

# ஈராக்தூதரகத்தை மூடும் கோரிக்கை இந்திய அரசால் நிராகரிப்பு

(புதுடில்லி)

புதுடில்லியிலுள்ள ஈராக்கிய தூதரகத்தை மூடுமாறும் ஈராக்கிய இராஜீகத்துறைப் பிரதிநிதிகளை வெளியேற்றுமாறும் அமெரிக்கா வற்புறுத்தி வரும் வேண்டுகோளை இந்தியா நிராகரித்துள்ளது.

அமெரிக்க தலைமையிலான ஈராக் மீதான போரை இந்தியா எதிர்க்கிறது எனினும் அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளும் கேள்விக்கே இடமில்லை என்றும் இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இதேவேளை ஈராக் போரில் காயமடைந்தவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் உதவ இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புஷ்சின் நேரடிக் கவனிப்பில் ஈராக் மீதான நடவடிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்கா,பிரிட்டன் தலைமையில் ஈராக்மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தம் சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சின் நேரடிக் கவனத்தின் கீழ் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. போரில் இடம்பெறும் அன்றாட மாற்றங்கள் அனைத்தும் இவருக்கு அறிவிக்கப்படுவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த காலங்களில் இத்தகைய நேரடிப் போர்த்தொடர்புகளை அமெரிக்க சனாதிபதிகள் கொண்டிருந்ததுடன் சிவில் யுத்தத்தின் போது ஒவ்வொரு செயற்பாடுகளும் அன்றைய சனாதிபதி ஆபிரகாம் லிங்கனுக்கு அறிவிக்கப்பட்டும் வந்திருந்தன.

அந்த யுத்தவேளையில் ஆறு பசுக்கள் கொல்லப்பட்ட சம்பவம் கூட ஆபிரகாம் லிங்கனுக்கு அவசர தந்தியூடாக அனுப்பி வைக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கை இப்போது புஷ்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஒவ்வொரு போர்நகர்வுக்கான முடிவுகளும் இறுதிக்கட்டம் வரை புஷ்சின் தீர்மானத்திற்காக காத்திருக்கின்றன.

# வாழையைத் தாக்கும் நீள்மூஞ்சி வண்டு

வாழையைப் பயிரிடும் விவசாயிகள் அநேகமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமான பிரச்சினை நீள் மூஞ்சி வண்டின் தாக்கமாகும். இந் நீள் மூஞ்சி வண்டானது வாழைப் பயிருக்கு அதிக அளவில் சேதம் விளைவிக்கும் பூச்சியாகும். வாழைக்கிழங்குகளுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சி இனம் வாழை வேர்வண்டு அல்லது கிழங்கு வண்டு என அழைக்கப் படும்.

வாழைப் போலித் தண்டு களுக்கு சேதம் விளைவிப்பதை தண்டு வண்டு என அழைக்கப் படும். வாழை வேர்வண்டு 10-14 மி.மீற்றர் நீளமானது. கறுப்பு நிற உடலைக் கொண்டது. வாழைத் தண்டு வண்டு 18 மி.மீற்றர் நீளமானது. இதன் உடல் மினுங் கும் கறுப்பு அல்லது சிவப்பு நிறமாக இருக்கும்.

பீடையின் இனத்திற்கேற்ப இவை தண்டு அல்லது கிழங்கில் முட்டையிடும். முட்டையில் இருந்து வெளிவரும் குடம்பிகள் கிழங்கு அல்லது தண்டைத் துளைத்து அதன் பாகங்களை உண்ணும். இப்பீடையின் தாக்கத்துக்குள்ளான வாழைமரம் காற்று மெதுவாக வீசும் போது கூட முறிந்து விழும். மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்படும், குலை யின் அளவு சிறிதாய் இருக்கும்.

### தாக்கப்பட்ட வாழையை அடையாளம் கண்டு கொள்ளுதல்.

### தண்டு வண்டின் தாக்கம்

வாழைத்தண்டு வண்டுகளால் பாதிக்கப்பட்ட மரங்களில் இலை கள் மஞ்சள் நிறமாகி உலரும் தண்டுவண்டுகளால் பாதிக்கப் பட்ட போலித் தண்டுகளை அவதானித்துப் பார்த்தால் அடிப்புறத்தில் துளைகளைக் காணலாம். சில வேளைகளில் இத்துளைகளினூடாக நீர் வடிய இடமுண்டு.

அதிகளவில் பாதிக்கப்பட்ட மரம் முறிந்து விழக்கூடும். அதேபோல் வாழைப் பொத்திகள் வெளிவராமல் தடைப்படுவதற்கும் இதுவும் ஒரு காரணமாக அமையலாம்.

### வேர் வண்டின் தாக்கம்:-

இப் பீடையினால் ஏற்பட்ட தாக்கத்தை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு கிழங்குகளை வெட்டிப்பார்க்க வேண்டும். கிழங்குகளை வெட்டிப் பார்க்கும் போது அவற்றில் குடம்பிகளால் உண்ணப்பட்ட பகுதிகளைக் காணலாம்.

ஆனால் வாழைக்குலை அறுவடை செய்யப்பட்ட மரங்களி லேயே இதனைச் செய்யமுடியும். அல்லது வாழை யின் அடியைக் கவனித்துப் பார்க்கும் போது அவற்றின் அருகே வளர்ச்சி யடைந்த வண்டுகள் காணப்படும். வேர்வண்டினால் பாதிக்கப்பட்ட மரங்களின் வளர்ச்சி குன்றிக் காணப்படும். இலைகள் படிப்படி யாக மஞ்சள் நிறமடைந்து காய்ந்து போய்விடும்.

தண்டுவண்டு, வேர்வண்டு ஆகியவற்றின் வாழ்க்கைச் சக்கரம் 25 நாட்களாகும். வாழ்க்கை வட்டத்தின் சகல பருவங்களையும் தண்டினுள்ளே அல்லது கிழங்குகளினுள்ளே அதிகரிக்கும். இரு வகையான வண்டுகளிலும் நிறையுடலிகள் இரண்டு வருடங்கள் வாழக் கூடியன.

வளர்ச்சியடைந்த தண்டு வண்டுகள் பறக்கக் கூடியன. அனால் வளர்ச்சி அடைந்த வேர் வண்டுகள் பறக்க முடியாதவை. எனவே, பாதிக்கப்படாத தோட்டங் களுக்கு வண்டுகள் இரவு நேரத்திலேயே பரவுகின்றன.

### கட்டுப்படுத்தல்:-

ஆரோக்கியமான குட்டிகளை மாத்திரம் நடுகைக்குத் தெரிவு செய்ய வேண்டும். வாழைத் தோட் டத்தைச் சுத்தமாக வைத்திருப் பதற்கு வாழைக்குலையை வெட் டிய பின் அம்மரத்தை நிலமட்டத் தில் வெட்டி விடவும். வெட்டிய வாழைகளை தோட்டத்தில் இருந்து அகற்றி விடவும். தோட்டச் சுகாதாரத்தை முக்கியமாகப் பேண வேண்டும். வண்டின் தாக்கம் காணப்படும் போது இதனைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். அல்லது வாழையை இரண்டாகப் பிளக்கவும். இதனை மீண்டும் சிறிய துண்டுகளாக வெட்டி தோட்டத்தில் பரவி விடவும். இதனால் இவை உலர்ந்த பின் பத்திரக்கலவையாகத் தொழிற்படும்.

வாழை மரத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமான இடத்தில் களைகள் காணப்பட்டால் அல்லது வாழை மரவரிசைகளுக்கிடையே காணப் படும் களைகளை மண்வெட்டி யால் அகற்றுதல் மூலமும் நீள் மூஞ்சி வண்டின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

வாழை மரத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டி இரண்டாகப் பிளந்து, பிளக்கப்பட்ட பகுதி நிலத்தில் படும் படியாக போட வேண்டும். இவ்வாறு இடப்பட்ட துண்டுகளினால் வாழை நீள் மூஞ்சி வண்டுகள் கவரப்படும். இவ்வண்டுகளை வாழைத்தண்டு களுடன் காலத்துக்குக் காலம் தோட்டத்திலிருந்து அகற்றவும்.

தோட்டத்திற்கு பூச்சி நாசினி விசிற முன் நீள் மூஞ்சி வண்டின் தாக்கம் உள்ளதா என்பதை அவதானித்துக் கொள்ளவும். பயிர்களின் வெளிப்புற அறிகுறி யைப் பார்த்து கிழங்கை வெட்டிப் பாருங்கள். வெட்டிப் பார்க்கும் போது வண்டுகள் காணப்படுமா யின் நாசினிகளை விசிறலாம்.

### பொறி முறை மூலம் கட்டுப்படுத்துதல்:-

வாழைமரத்தைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிய துண்டின் மேல் "காபோபியுரான்" தூளைப் பரவி விடவும். இதன் மேல் மற்றைய துண்டை வைத்து மூடி விடவும். இம்முறையானது பீடை யைக் கட்டுப்படுத்தும் பொறி முறையாகும். அடுத்து இரண்டு வாழைத்துண்டுகளுக்கிடையே சிறிய கற்கள் சிலவற்றை வைக்க வும். இதனால் பொறியினுள்ளே வண்டுகள் இலகுவாகச் செல்ல வழி ஏற்படும். ஏக்கர் ஒன்றில் இவ்வாறான 25 பொறிகளைப் பரவலாக வெவ்வேறு இடங்களில் வைக்கவும். பொறியினால் கவரப் படும் பீடைகள் அதில் காணப் படும் இரசாயனத்தினால் அழிக் கப்படும். இரு கிழமைக்கொரு தடவை பொறியைப் புதுப்பிக்க வேண்டும்.

### வாழைக் குட்டிகளை பரிகரித்தல்:-

வாழைக் குட்டிகளை நடுவதற்கு முன் கிழங்குகளை நன்கு சுத்தம் செய்வது அவசியமாகும். இதற்கு பச்சைச் சாணம், சாம்பல் என்பன வற்றை நீரில் கலந்து பாகு போன்ற திரவமாகத் தயாரித்தல் வேண்டும். இக்கரைசலின் ஒரு கலனிற்கு 6 கிராம் 'காபோபியு ரான்' கொண்டு வாழைக் குட்டி களின் கிழங்கை 5-10 நிமிடம் தொற்று நீக்கம் செய்யவும். இதன் பின் ஒரு கிழமை நிழலான இடத்தில் வைத்திருந்து பின்னர் நடவும்.

வளர்ச்சி அடைந்த தோட்டத்தில் வண்டுகளின் சேதம் இருந்தால் ஒரு வாழைமர அடிக்கு 10 கிராம் காபோபியுரானை இடவும். ஆனால் குலைபோடும் தறுவா யில் உள்ள மரங்களுக்கு இந்த இரசாயனத்தை இடுவது பொருத் தமானதல்ல. மேலதிக விபரங்கள் தேவையாயின் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# பொருண்மிய பொன்னம்பலத்தார்



இந்தக்கிழமை நான் சொல்லப்போற விசியமும் ஒரு முக்கியமான விசியமாகும்.

எங்கடை ஆட்கள் கனபேர் கூடப் பலம் இல்லாமல் இருக் கினம். இதுக்கு கன காரணங் கள் இருக்கு. அதில முக்கிய மானது போசாக்கான உணவு களை எங்கடை ஆட்கள் உண்ணாமல் இருக்கிறதுதான்.

போசாக்கான அதாவது போசணையான உணவு வகை களை உண்ணுறது தொடர்பாக எங்கட ஆக்களுக்கு சரி யான விளக்கம் இல்லை எண்டுதான் எண்ண வேண்டியிருக்கு.

விளக்கம் எண்டு என்னத்தைச் சொல்ல வாறனெண் டால் சனத்தின்ர பொருளாதாரக் கஸ்டம், பாரம் பரியமான சில சாப்பாட்டுமுறை, மூடநம்பிக்கைகள் எண்டு கனகாரணங்களை இதுக்குச் சொல்லலாம்.

ஆனால் பாருங்கோ, மெத்தப் படிச்ச பெரியாட்கள் சொல்லுற காரணங்களை ஒருக்கா பட்டியல் போட்டுப் பாருங்கோ.

1. பொருளாதார நிலை அதாவது வறுமை நிலை
2. போசணைபற்றிய கல்வி அறிவு இல்லாமை.
3. உணவுகளின் விலை.
4. புதிய மரக்கறிவகை,பழங்கள் சேர்க்கப்படாமை.
5. பழக்கவழக்கமும் மூட நம்பிக்கையும்.
6. உணவைப் பிழையான முறையில் சமைத்தல்.
7. காலநிலை வேறுபாடு.
8. தேவைக்கு ஏற்ப உணவு உற்பத்தி இல்லாமை.
9. போர்ச்சூழல்

இதுகளைப் பற்றி யோசியுங்கோ.

# இலைவெளிறல் நோய்

இந்நோய் நெற்பயிர்களில் காணப்படுகின்றது. இது பற்றீரி யாவால் ஏற்படுகின்றது. இளம் பயிர்களுக்கு பற்றீரியாவினால் இந் நோய் ஏற்படும்போது இந்நோ யைக் "கிறேசக்" என்றழைக் கப்படும். வளர்ச்சியடைந்தபின் இந்நோய் ஏற்பட்டால், இதை இலைவெளிறல் நோய் என்று கூறுவதுமுண்டு. "கிறேசக்" என்ற இந்நோயானது நாற்றுக்களின் வளர்ச்சிப்பருவத்தில் 2-6 கிழமைக் குள்ளான நாற்றுக்களைப் பாதிக்கும். இந்நோய் ஏற்பட்டால் சந்துகுத்தியின் தாக்கமெனக் கருதுவதுமுண்டு.

நாங்கள் வயல்களில் நாற்றுக் களை நடுவதற்குப் பிடுங்கும் போது அதன் வேர்,இலைகள் முறிவதால் ஏற்படும் காயங்கள் ஊடாகவும் இலை நுணியில் காணப்படும் நீர்த்துளைகளினூடா கவும் பற்றீரியா நெற்பயிரில் செல்லக்கூடியதாக இருக்கிறது. இலை,வேர்களினூடே சென்ற பற்றீரியா கடத்தும் இளையங் களைப் பெருக்கி இலை நுனிக ளில் காணப்படும்.

### நோயின் அறிகுறிகள்:-

நோயினால் பாதிப்புற்ற நெற்பயிரின் இலைகள் நீரில் நனைந்தது போன்று காணப்படும். இதன்பின் படிப்படியாக மத்திய நரம்பை நோக்கி இலைகள் சுருளும். இறுதியில் முழு நாற் றுமே உலர்ந்து காய்ந்துவிடும். பற்றீரியாவினால் கடத்தப்படும் இழையங்கள் பாதிக்கப்படுவதால் நாற்றினுள்ளே நீர், உணவு என்பன கடத்தப்படுவது தடைப்படும். இதனால் இலைகள் மஞ்சள் நிறமாகும்.

வளர்ச்சியடைந்த பயிரில் பற்றீ ரியா உட்சென்றவுடன் முதலாவ தாக இலை ஓரங்களில் மஞ்சள் நிறத்தில் இருந்து வெள்ளை நிறமான நீரில் நனைத்தது போன்ற தோற்றமுடைய கோடு கள் உருவாகும்.

இந்நோயின் அறிகுறியானது படிப்படியாக மஞ்சள் கலந்த கபில நிறமாக மாறி முழு இலைப் பரப்பும் அலை போன்ற வடிவத் தில் காணப்படும். நோயைத் தாங் கிவளர முடியாத வர்க்கங் களை நாம் பயிரிடுவோமாயின் இந் நோய் அதிகமாகக் காணப்படும்.

### நோய் பரவுதல்:-

காலை நேரத்தில் மிகச்சிறிய குண்டூசித் தலைபோன்ற கட்டிகள் நோயுற்ற தாவர இலைப்பரப்பில் இப்பற்றீரியா காணப்படும். மழை அல்லது பனி பெய்யும் போது இப்பற்றீரியாக் கலங்கள் அவற் றில் கரைந்து இலகுவாகப் பரவும். இதைத்தவிர வெள்ளம், அதிக காற்று, நீர்ப்பாசன நீர் ஆகியவற் றின் மூலம் இந்நோய் பரவ வாய்ப்புண்டு.

நைதரசன் பசளைகள் அதிகள வில் இடப்பட்ட வயலில் இந் நோய் இலகுவில் பரவும். இந் நேயைக் கட்டுப்படுத்த நோயை எதிர்த்து வளரக்கூடிய நெல் வர்க்கங்களைப் பயிரிடுவதன் மூலம் இந்நோயை ஓரளவு கட்டுப்படுத்தலாம். விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட புதிய இனங்களான பி.ஜி-403,பி.ஜி-379-2 ஆகிய நெல் வர்க்கங்கள் எரிபந்த நோய். இலை வெளிறல் ஆகியவற்றை யும், பற்றீரியா இலை வெளிறலை யும், கபில நிறத் தத்தியையும் இந்நெல் லினங்கள் ஓரளவு எதிர்த் தும் இந்நோய்களைத் தாங்கியும் வளரக்கூடிய வல்லமை இவ்வி னங்களுக்குண்டு. இதுமட்டுமல்ல பசளைத் தூண்டற் பேற்றையு முடைய நெல்லினங்களாகும்.

இவற்றை விவசாயிகள், விவ சாய கமநலசேவை உத்தியோகத் தினரிடம் தொடர்பு கொண்டு திருத்திய புதிய நெல்லினங் களைப் பெற்றுப் பயிரிடுமாறு கேட்டுக்கொள்வதோடு, இந்நோ யின் தாக்கத்திலிருந்து விடுபட்டு உச்ச விளைவைப் பெறுவீர்கள் என நம்பப்படுகிறது.

**சிவகமலா**

# பொருண்மிய வெளிச்சம்

# கால்நடை அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு உற்பத்தியாளரை ஊக்குவிக்க நடவடிக்கை

**கால்நடை உற்பத்தியை மேம்படுத்துவதுடன், கால் நடை வளர்ப்போரை ஊக்குவிக்கும் வகையிலான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.**

இந்நடவடிக்கைக்கு இணங்க சிறந்த பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட வுள்ளனர்.

மேலும், கால்நடை அபிவிருத்தியினை மேம்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் நல்லின கால்நடை (மாடு, ஆடு, எருமை, கோழி ஏனைய பறவைகள், விலங்கினங்கள்) வளர்ப்பில் ஈடுபடும் தமிழீழ விவசாயிகள் அனைவரையும் தங்கள் கால் நடைகள் பற்றிய பூரண விபரங்களுடன் தங்களுக்கு அண்மையாகவுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச செயலகங்களுடனோ அல்லது கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்கள அலுவலகங்களுடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுப்பட்டுள்ளது.

இதற்கான கால எல்லை இம்மாதம் 31ஆம் திகதி எனவும் செய்திக் குறிப்பொன்றின் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடன் திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

புளியங்குளத்தில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி வங்கியினால் பெண்களின் தொழிற்பயிற்சி முன்னேற்றத்தை மேம்படுத்தும் பொருட்டு மகளிர் சேமிப்பு மற்றும் கடன் திட்டங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

## சிறப்புற ஆரம்பமான அன்னைபூபதி நிகழ்வுகள்

(மன்னார்)

தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுகள் மன்னாரில் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் மன்னார் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் தமிழீழ தேசியக் கொடியை கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த திருமகன் ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரினை மாவட்ட உதவிப் பொறுப்பாளர் மூர்த்தி ஏற்றி வைத்தார். தொடர்ந்து கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் பெருமளவான மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர். (மி)

## இராணுவ கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கை மன்னாரில் ஆரம்பம்

(மன்னார்)

மன்னாரில் கண்ணி வெடிகள், மிதிவெடிகள் அகற்றும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

மன்னார் அரச செயலகத்தில் இவ் விடயம் தொடர்பாக அண்மையில் கூட்டம் ஒன்று இடம் பெற்றது.

இதன்படி முதல் தலைமன்னார் பியர் பகுதியிலும் தொடர்ந்து முசலிப் பகுதியிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்துச் செல்வது எனவும் முடிவெடுக்கப்பட்டது. (மி)

## கனரக வாகன சாரதிகளுக்கு மேலதிகப் பயிற்சிநெறி

(அலுவலக செய்தியாளர்)

நியாப் வேலைத்திட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட கனரக வாகனங்களின் சாரதிகளுக்கு பயிற்சியினை வழங்க வீதி அபிவிருத்தி பொறியியலாளர் சிவயோகனால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும்,கிளிநொச்சி மாவட்டத்திற்கும் கொண்டு வரப்பட்ட கனரக வாகனங்களை இலகுவாக இயக்கி வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்தும் நோக்கில் வவுனியாவிலிருந்து இளைப்பாறிய கனரக வாகன பயிற்றுனர் ஒருவரை கிளி. மாவட்டத்திற்கு அழைத்து பயிற்சி வழங்கப் பட்டு வருகின்றது. (அ)

## பாண்டியன்குளம் பிரதேசத்தில் வீரமுரசு மாத நிகழ்வு

பாண்டியன்குளம் பிரதேசத்தில் வீரமுரசு மாத நிகழ்வு கடந்த வெள்ளியன்று இரவு 8.30 மணியளவில் பாலிநகர் ம.வி. மண்டபத்தில் ஆரம்பமானது. முதல் நிகழ்வாக பாலிநகர் ம.வி. மாணவர்களின் மாவீரர் எழுச்சிப் பாடல் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து செல்வி சௌசியாவின் நடனம் இடம் பெற்று தொடர்ந்து இன்றைய சமகால அரசியல் நிலவரம் தொடர்பாகவும் தே.எ. பேரவையின் செயல் திட்டம் தொடர்பாகவும் முல்லை மாவட்ட தே.எ.பே. பொறுப்பாளர் நா. நவாஸ் கருத்துரை வழங்கினார்.

இறுதி நிகழ்வாக யோகபுரம் ம.வி. ஆசிரியர் தருமபூபதி நெறியாள்கையில் யோகபுரம் ம.வி. மாணவர்களால் மேடையேற்றப்பட்ட தேசிய விருது பெற்ற முள்வேலி நாடகம் இடம்பெற்றது.

## ஒட்டுசுட்டான் பிரிவில் அறுவடை விழா நிகழ்வு

முல்லை மாவட்ட விவசாயத் திணைக்களமும் த.பொ.மே நிறுவனத்தின் முல்லை மாவட்ட செயலகமும் இணைந்து ஒட்டு சுட்டான் விவசாய போதனாசிரியர் பிரிவில் காக்கை பனிக்கன்குளத்தின் கீழ் மேற்கொண்ட தூயஇன விதைநெல் உற்பத்தித் திட்டத்தின் அறுவடை விழா அண்மையில் நடைபெற்றது.

த.பொ.மே நிறுவனத்தின் முல்லை மாவட்டப் பகுதிப் பொறுப்பாளர் க.தமிழரசன், ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் வே.தயாபரன்,விவசாயப் போதனாசிரியர்கள் விஜயன், குகானந்தன், ஒட்டுசுட்டான் கமக்காரர் அமைப்புச் செயலர் செல்வி.மேரிதிரேசா, கற்சிலைமடு கமக்கார அமைப்புத் தலைவர் வேலாயுதம், பொருண்மிய மதியுரையக நிதிப்பொறுப்பாளர் முகுந்தன் உட்பட சகல விவசாயப் பயனாளிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சி நெறி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் தாயகப் பிரதேசத்தில் உள்ள 08 மாவட்டங்களில் செயற்பெறும் நிறுவனங்களின் செயற்பாட்டுக்கான முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சி நெறி இன்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் கேட்போர் கூடத்தில் புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நடாத்தப்பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்ந்து 40 நாட்கள் நடைபெற உள்ளது.

இப்பயிற்சி நெறிக்கான துறை சார்ந்த வல்லுநர்களால் திட்டமிடப்பட்ட செயல்முறை விளக்கத்துடன் கூடிய பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இப்பயிற்சி நெறிக்கான அனைத்துத் திட்டமிடல் செயற்பாடுகளின் முன்னெடுப்புக்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் முன்னெடுத்த அதே வேளை எதிர்காலத்தில் தமிழர் தாயகத்தில் நடைபெறவுள்ள நிறுவனம் சார்ந்த வேலைத் திட்டங்களின் முன்னெடுப்புக்களுக்கு தகுதியான 40 வல்லுனர்களை உருவாக்கும் களமாக இம்முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சி நெறிஅமையும் என்பது குறிப்பிடத் தக்கது. (சோ, லோ)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்தும் கால் இறுதி, இறுதி நிலை வினாவிடைப்போட்டி

(அலுவலக செய்தியாளர்)

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் ஆண்டுதோறும் பாடசாலை மாணவர்களிடையே சில போட்டிகளை நடாத்தி வருகின்றது. இம்முறை இப்போட்டிகள் வன்னி நிலப் பகுதிகளிலும் நடத்தப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் பல வன்னிப் பிரதேச பாடசாலைகள் கலந்து கொண்டதுடன் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற அரையிறுதிச் சுற்றுக்கு இப் போட்டியில் எட்டுப் பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம், வேம்படி மகளிர் பெண்கள் உயர்தரப் பாடசாலை யாழ்ப்பாணம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் கரவெட்டி, யாழ்ப்பாண இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி கிளிநொச்சி, விக்கினேஸ்வராக் கல்லூரி, புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை, கிளி. முருகானந்தா மகாவித்தியாலயம் முரசுமோட்டை ஆகியன இதில் பங்குபற்றின.

இதில், சென் ஜோன்ஸ் கல்லூரியை வென்று கிளி. முருகானந்தா மகாவித்தியாலயமும், புனித ஹென்றியரசர் கல்லூரியை வென்று வேம்படி மகளிர் பெண்கள் உயர்தரப் பாடசாலையும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியை வென்று யாழ்ப்பாண இந்துக் கல்லூரியும், விக்கினேஸ்வராக் கல்லூரியை வென்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் கால் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற் றுள்ளன.

கால் இறுதி, இறுதிச் சுற்று வினாவிடைப் போட்டியானது எதிர் வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதனை யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உதவிச் செயலாளர் பேராசிரியர் நா. ஞானகுமாரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி மற்றும் வினாவிடைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசுகளும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஆண்டமர்வின்போது வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றார். இச்சான்றிதழ்கள் ஏப்ரல் 4ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ, லோ)

## புனரமைப்பு

ஒட்டுசுட்டான் கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைப்பும், கூட்டமும் கடந்த வியாழன் ஒட்டுசுட்டான் கிராம அலுவலர் தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக செ. அழகையா, உபதலைவராக சண்முகராசா, செயலாளராக கு.கிருபாகரன், உபசெயலாளராக கந்தையா,பொருளாளராகஇதிருலிங்க நாதன் ஆகியோருடன் ஆறு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (05)

## மட்டு. தேசிய கல்வியியற் கல்லூரி தாழங்குடாவிற்கு மாற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த புதன்கிழமை தொடக்கம் தாழங்குடாவில் 30 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள அதன் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மேற்படி கல்லூரி இதுவரை காலமும் இடநெருக்கடிக்கு மத்தியில் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை மாணவர் விடுதியில் இயங்கிவந்தது.

மட்டு. தேசிய கல்வயியற் கல்லூரியில் 1ஆம் வருடத்தில் 212 ஆசிரிய மாணவர்களும், 2ஆம் வருடத்தில் 95 பேரும் தற்போது பயிற்சி பெறுகின்றனர். ஆரம்பக்கல்வி, தமிழ், சமூகக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகள் இங்கு போதிக்கப்படுவதாகக் கல்லூரி பீடாதிபதி எஸ். பாக்கியராசா தெரிவித்துள்ளார்.

# மாமரங்களில் உயர் விளைவைப்பெற உரிய பராமரிப்பு அவசியமாகும்

## -மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

மாமரத்தில் இருந்து தரமான பழங்களையும், உயர் விளைச் சலையும் பெறவேண்டுமாயின் மரங்களை உரிய முறையில் கத்தரித்தலும், நோய் பீடையிலிருந்து பாதுகாத்தலும் அவசியமானது என உதவி விவசாயப் பணிப் பாளர் திருமதி. சி. ஆனந்தராசா தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் மாசி, பங்குனி மாதங்கள் மாமரங்களில் இளந்தளிர்களும், பூக்களும் உருவாகும் காலமாகும், இக்காலத்தில் மாவிலைத் தத்தி இளந்தளிர்களையும், பூ அரும்புகளையும் தாக்குகின்றது. இதனால் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.

மாமரத் தத்தியை கட்டுப்படுத்துவதற்கு கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகளாவன:-

மாமரத்தை சுற்றியுள்ள இடங்களைத் துப்பரவாக்கிப் பயிர்ச் சுகாதாரம் பேணப்பட வேண்டும்.

மரத்தின் எல்லாப் பாகங்களிலும் சூரியஒளி படக்கூடியதாகக் கத்தரித்து வளர்க்க வேண்டும்.

மாமரக் கிளைகளை ஊடுருவிச் செல்லும் வண்ணம் புகையூட்ட வேண்டும்.

இரசாயனக் கட்டுப்பாடு:- தத்தியின் தாக்கம் கூடுதலாக அவதானிக்கப்பட்டால் பின்வரும் பூச்சி நாசினியை விசிறவும். "டைமீதோயேற்" 30 மி.லீ -12 லீற்றர் நீரில் கலக்கவும்.

மாமரத்திற்கு பூச்சி நாசினி விசிறுவதற்கு 'றொக்கிங்' தெளி கருவியைத் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் இலவசமாகப் பெற்றுப் பாவித்து திருப்பி ஒப்படைக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்குப் பிரதேச விவசாயப் போதனாசிரியர் களுடன் தொடர்பு கொள்ளவும் எனத்தெரிவித்தார். (அ)

# அதே இடத்தில் சேவையினால் பெருமளவானோர் பயன்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் இரண்டாவது அதே இடத்துச் சேவையால் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நன்மை யடைந்துள்ளனர்.

முல்லை. மாவட்ட அரசாங்க அதிபரின் இரண்டாவது முறையாக அதே இடத்தில் சேவை மல்லாவி மத்திய கல்லூரியில் இரு தினங்கள் மிகவும் சிறப்புற இடம்பெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கு, தமிழீழ தேசியக்கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டு நிகழ்வு சிறப்பாக ஆரம்பமானது. மேற்படி சேவைகள் மூலம் வாகன அனுமதிப் பத்திரத்திற்கு 189 பேரும், பிறப்பு, இறப்புப் பத்திரத்திற்கு 525 பேரும் ,தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பத்திற்கு 509 பேரும், திருமணப் பதிவுக்கு 50 பேரும், வாகனக்காப்புறுதிக்கு 50 பேருமாக 1323 பேர் விண்ணப்பித்தனர். இதுபோன்ற சேவை வருங்காலங்களில் இடம் பெறுமாயின் மேலும் பலஆயிரம் பொதுமக்கள் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.இந்நிகழ்வில் முல்லை. அரச அதிபர் உட்பட பல அரச உயர் அதிகாரிகள் பங்குகொண்டனர். (07)


## கிளி – மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவன ஆங்கிலக் கற்கை நெறி (என்.சி.இ.) மரவேலை மாணவர்களுக்கு

மேற்படி கல்வி நிறுவனத்தில். ஆங்கிலக் கற்கை நெறியில் (2002) இறுதிப் பரீட்சை எழுதாத மாணவர்களும். மரவேலைப் பயிற்சி நெறியில் (2002) சான்றிதழ் பெறாத மாணவர்களும். எதிர்வரும் 04-04-2003ஆம் திகதிக்கு முன் தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி.

வன்னேரிக்குளம் வீதி.
ஆனைவிழுந்தான்.
(சி.8028)

## கிளி. மாவட்ட தொழில்நுட்பக்கல்லூரி உயர் கணக்கியல் சான்றிதழ் கற்கை

மேற்படி கற்கைநெறி இன்றைய தொழில் வாய்ப்புக்கேற்ப தகவல் தொழில்நுட்பம். கணினி உள்ளிட்ட பாடத்திட்டங் களுடனான கற்கை நெறியில் கிளிநொச்சி நகரில் ஆரம்பிக்கப் படவுள்ளது. பின்வரும் தகைமையுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவத்தில் 20.04.2003க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

| | | |
|---|---|---|
| வயது | : | 18 - 40 வரையானது |
| கல்வித்தகைமை | : | க.பொ.த. உயர் தரம் |
| குறிப்பு | : | 2003இல் க.பொ.த உ/த பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களும் விண்ணப்பிக்க லாம். |

வன்னேரிக்குளம் வீதி,
ஆனைவிழுந்தான். (சி-8029)

அதிபர்,
தொழில் நுட்பக்கல்லூரி.

## பணியாளர் தேவை

**வன்னியில் இயங்கும் முன்னணி நிறுவனமொன்றிற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவையாக வுள்ளனர். தகைமையுடையவர்கள் சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.**

**நேர்காணல் நடைபெறும் இடம்** : இளவேனில் வாணிப அலுவலக கட்டடத் தொகுதி, கிளிநொச்சி.

**காலம்** : **31.03.2003 மு.ப. 10.00 மணி.**

| | | |
|---|---|---|
| **பணி நிலை - 1** | மேற்பார்வையாளர் | (ஆண்கள் மட்டும்) |
| **பணி நிலை - 2** | கணக்கு எழுதுநர் | (இருபாலாரும்) |
| **பணி நிலை - 3** | எழுதுநர் | (இருபாலாரும்) |
| **பணி நிலை - 4** | களஞ்சியக்காப்பாளர் | (ஆண்கள் மட்டும்) |
| **பணி நிலை - 5** | தட்டெழுத்தாளர் | (இருபாலாரும்) |
| **பணி நிலை - 6** | கொள்வனவு அலுவலர் | (ஆண்கள் மட்டும்) |

**தகைமைகள்** : பணி நிலை 1ற்கு க.பொ.த. (சாதாரண) தரம் தேர்ச்சியடைந்திருப்பதுடன், க.பொ.த. (உயர்) தரம் கற்றிருத்தல் வேண்டும்.
பணிநிலை 2ற்கு, க.பொ.த. சாதாரணதரம் தேர்ச்சியுடன் கணக்குப்பதிவாளர் கற்கை நெறியொன்றில் கற்றிருத்தல்.
பணிநிலை 3ற்கும், 4ற்கும், 5ற்கும் க.பொ.த. சாதாரண தரம் தேர்ச்சியடைந்திருத்தல்.
பணிநிலை 6ற்கு க.பொ.த. சாதாரணதரம் கற்றிருத்தல்.

**பட்டறிவு** : 01. கொள்வனவு அலுவலர் பணிநிலைக்கு கொள்வனவுப் பணியில் இரண்டு வருடப் பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. ஏனைய பணிநிலைகளுக்கு குறித்த பணியில் பட்டறிவுடையவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தகவல்:-**
**விளம்பர முகவர்-கிளிநொச்சி**

(3037)

## தமிழீழப் போக்கு வரவுக் கழகம் பருவகாலச் சீட்டு வழங்கல்

| இடம் | நாள் | நேரம் | வழங்கும் இடம் |
|---|---|---|---|
| பளை (முகமாலை) | 25-03-2003 -31-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | த.போ.க. பளைப் பணியகம். |
| கிளிநொச்சி | 25-03-2003 -31-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | த.போ.க். கிளிநொச்சிப் பணியகம். |
| பூநகரி | 25-03-2003 -28-03-2003 | காலை 9.00-பகல் 3.00 | உதவி அரசாங்க அதிபர் பணியகம். |
| விசுவமடு | 25-03-2003 -28-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | பாண்டியன் நடுவப்பணியகம்.விசுவமடு. |
| புதுக்குடியிருப்பு | 25-03-2003 -31-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | த.போ.க. புதுக்குடியிருப்புப் பணியகம். |
| முல்லைத்தீவு | 25-03-2003 -31-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | பேருந்து நிலையம். |

**குறிப்பு:-** **குறித்த நாளில், நேரத்தில் பருவகாலச் சீட்டு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.**

**முகாமையாளர்,**
**தமிழீழப் போக்குவரவுக் கழகம்,**
**நடுவப்பணிமனை, விசுவமடு.**

(சி-8033)

## சிந்தனைக்கு



நாம் ஒன்றுபட்ட மக்களாக-ஒரே தேசிய சக்தியாக - அணிதிரண்டு எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 24-03-2003

## நியாயத்திற்கு அங்கீகாரம்

மட்டக்களப்பில் 27ஆம் திகதி விடுதலைப்புலிகளுக்கும் - முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள சந்திப்பானது அப்பிரதேசத்தில் இரு பகுதியினருக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கு உருவாக்கப்பட்டதொரு வாய்ப்பாகும். இவ்வாறு இருதரப்பும் தமது பிரச்சினைகளைப் பேசித் தீர்த்தல் என்பது இரு தரப்பினருக்கும் நன்மை பயக்கக் கூடியதொன்றாகையால் வரவேற்கத்தக்கதொன்றே.

இதேவேளை, முஸ்லிம் பிரதிநிதிகள் இனப்பிரச்சினை தொடர்பாக நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் தம்மை மூன்றாம் தரப்பாகச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும் என முன்வைத்த கோரிக்கைக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் சாதகமான பதிலை வெளிப்படுத்தவில்லை.

ஏனெனில், தற்போதைய பேச்சுவார்த்தையானது கடந்த 25 வருடகாலமாகப் போரிட்ட இருதரப்பினருக்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென நடைபெற்றுவரும் ஒன்றாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்களுக்கு பிரச்சினைகள் எதுவும் இல்லை எனக் கூறவில்லை. முஸ்லிம் மக்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், சிறிலங்கா அரசும் - விடுதலைப்புலிகளும் நடத்தும் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம்களின் பிரச்சினைகள் ஆராயப்படும் வேளைகளில் மட்டும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டால் போதும் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.

விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடு முஸ்லிம் மக்களின் உரிமைகளை மறுப்பதாகவோ புறந்தள்ளுவதாகவோ இல்லை. தமிழ் மக்களுக்குரிய அந்தஸ்தையும், பாதுகாப்பையும் ஒத்தசம உரிமைகள் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படும் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும். இதனை தம்மைச் சந்தித்த முஸ்லிம் பிரதிநிதிகளிடம் விடுதலைப்புலிகள் தெளிவாகவே வலியுறுத்திக் கூறியும் உள்ளனர்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் முஸ்லிம் பிரதிநிதிகளை மூன்றாம் தரப்புப் பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தையில் இணைத்துக்கொள்ள உடன்படாது உள்ளமை சரியானதொரு நிலைப்பாடேயாகும். ஏனெனில், சர்வதேச மத்தியஸ்தத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையானது 25 வருடங்களாகப் போரிட்ட இரு தரப்பினருக்கு இடையிலானதாகும். இதில் முஸ்லிம் தரப்பு மூன்றாம் தரப்பாக இடம் பெறுதல் என்பது அர்த்தப்பாடு உடையதல்ல.

அத்தோடு முஸ்லிம் தரப்பானது யுத்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கத் தரப்புடன் இணைந்தே செயற்பட்டுள்ளது. ஆகையினால், முஸ்லிம் தரப்பானது தமது பிரச்சினைக்குத் தீர்வினை அரசாங்கத் தரப்புடனேயே பேசிக்கொள்ளுதல் பொருத்தப்பாடானதொன்றாகும். ஆயினும் முஸ்லிம் மக்கள் மொழியாலும் பொருளாதாரத்தாலும் தமிழ் மக்களுடன் ஒன்றுபட்ட மக்களாக இருப்பதன் காரணமாகவும் தமிழர் தாயகப்பிரதேசமே முஸ்லிம் மக்களின் தாயகமாக இருப்பதன் காரணமாகவும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பேசப்படும் வேளையில் அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தையும், அந்தஸ்தையும் வழங்கப் புலிகள் முன்வந்துள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம் தரப்பானது தமிழ் மக்களுடன் - விடுதலைப்புலிகளுடன் இணைந்தே தமது உரிமைகளையும், பாதுகாப்பான வாழ்வையும் வென்றெடுக்க முடியும் என்பதையும் புரிந்துகொள்ளுதல் வேண்டும். ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாட்டிற்கு முஸ்லிம் தரப்பினரைப் பயன்படுத்த விளைந்ததே தவிர ஒரு போதும் முஸ்லிம்களுக்கு உரிமைளை வழங்கத் தயாராக இருந்ததில்லை.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் நடந்து கொண்டிருந்தமையும் விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவம் வழங்கிய அதிகார பிரதிநிதித்துவமுமே முஸ்லிம் தரப்பின் அரசியல் வலுவை அதிகரித்தது போன்றதொரு நிலைப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், சமாதானம் ஒன்று நிலைநிறுத்தப்பட்டாலோ அன்றி விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டாலோ முஸ்லிம்கள் பலமிழந்து போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

முஸ்லிம் தரப்பு குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் தாமே சிறிலங்கா ஆட்சியாளர்கள் யார் என்பதைத் தீர்மானிப்பவர்கள் எனக் கூறிக்கொண்டதுண்டு. ஆனால், கடந்த இரு ஆட்சிக்காலத்திலும் முஸ்லிம் காங்கிரசால் முஸ்லிம் மக்களுக்கு பெற்றுக்கொடுத்த அரசியல் உரிமைதான் என்ன? பாதுகாப்புத்தான் என்ன?

தற்போதைய நிலையில் சனாதிபதி சந்திரிகா தென்கிழக்கு மாகாணசபை ஒன்றை முஸ்லிங்களுக்கு தருவதற்குத் தயார் என்று கூறலாம். ஆனால், ஏழு வருடங்கள் பதவியில் இருந்தபோது ஏன் அதை வழங்கவில்லை. தற்பொழுது எதிர்க்கட்சியானதும் ஆட்சியை மீளக் கைப்பற்றுவதற்காக அவர் இதனைக் கூறலாம். ஆனால் அதற்குக்கூட பொ.ஐ.முன்னணியின் சகாவான ஜே.வி.பி. அங்கீகரிக்குமா?

முஸ்லிம் மக்கள் தமது உரிமைகளைக் கோருவது என்பது தவறானதொன்றல்ல. ஆனால், அவர்களின் கோரிக்கைகள், யதார்த்தத்தின்பாற்பட்டு நடைமுறைச் சாத்தியமானவையாகவும் இருத்தல் வேண்டும். ஏனையவர்கள் சிந்திய இரத்தத்தில் தாம் அரசியல் பேரம் நடத்த [illegible] என்பது அனுமதிக்கத்தக்கதாக இருக்கமாட்டாது.

# அனைத்து மக்களுக்கும் சமமான உரிமை சட்டவிதிகள் வருட இறுதிக்குள் தயார்!

## -பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் சமமான உரிமைகளை வழங்கக்கூடிய புதிய நிர்வாக முறை ஆரம்பிக்கப் படும் என்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் மூலம் மனித உரிமைகளை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சகல மக்களும் சமமான உரிமைகளை அனுபவிப்பதற்கு ஏற்றவகையில் இந்த வருடத்திற்குள் சட்டவிதிகள் உருவாக்கப்படும்.

பாராளுமன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஆலோசனை கூறக்கூடிய வகையில் தேசிய சபை ஒன்று அமைக்கப்படும்.

செய்திச்சுதந்திரம், தகவல் பெறுவது ஆகியவற்றுக்கு இடையூறாக இருக்கும் சகல சட்டங்களையும் ஒழித்துக்கட்டும் வகையில் அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வரப்படும்.

தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. சகல அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கு முன்பதாக தமது கட்சிகளின் கொள்கைகளை தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிப்பது இனிமேல் கட்டாயமாகவிருக்கும்.

அரசியல் கட்சிகள் அளித்த வாக்குறுதியை அவை காப்பாற்றுகின்றனவா? என்பதைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பும் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்படும்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் வடகிழக்கு மாகாணத்தில் மிக விரைவில் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போர் நீடித்தால் மட்டுமே எரிபொருள் தட்டுப்பாடு

## -எரிபொருள் மின்சக்தி அமைச்சு

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கத் தாக்குதல் தொடர்ந்து நீடித்தால் மட்டுமே இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம். ஆனால் எம்மிடம் ஒரு மாதத்திற்குரிய எரிபொருட்கள் கையிருப்பில் உள்ளன என எரிபொருள் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈராக் யுத்தம் தொடர்ந்து பலநாட்களுக்கு நடைபெற்றால் ஈரானிலிருந்து எரிபொருட்களைக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும். அத்துடன் இந்தியாவும் எரிபொருட்களை இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது உலக சந்தையில் எரிபொருட்களின் விலை உயர்ந்தால் இலங்கையிலும் விலை உயர்வு தவிர்க்க முடியாததொன்றாகும்.

# அரசிற்கெதிரான எதிர்க்கட்சியினர் பேரணியில் பொ.ஐ.மு.புறக்கணிப்பு!

## -ஜே.வி.பி செயற்பாட்டால் ஆட்சேபம்

(கொழும்பு)

அண்மையில் கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புப் பேரணியின் போது பொ.ஐ.மு சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக செய்தி கள் தெரிவிக்கின்றன.

தமது ஆதரவாளர்களுடன் அரசுக்கு எதிரான கோஷங்களை முழங்கிய வண்ணம் பேரணியில் சென்ற எம்.பிக்கள் கூட்டம் நடைபெற்ற மேடைப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்ட குழுவினர் தமது ஆதரவாளர்களுக்கு வெளியிடங்களில் கூட்டம் நடத்துமாறு கேட்கப்பட்டனர். இதற்கு மறுப்புத் தெரிவித்த பொ.ஐ.மு ஆதரவாளர்கள் வீதியோரங்களில் கூட்டம் நடத்தியுள்ளனர்.

பொ.ஐ.மு ஆதரவாளர்களிடம் தமது அணியின் நிறமான நீல நிறக் கொடிகளும் சுலோகங்களும் இல்லாததைப் புரிந்துகொண்ட ஜே.வி.பி யினர் தமது நிறமான சிவப்பு நிறத்திலான கொடிகளையும் வேறு பொருட்களையும் வழங்கியுள்ளதாகவும் கூட்டம் நடைபெற்ற மேடை முழுவதும் சிவப்பு நிறத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்ததாகவும் பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் குறை கூறியுள்ளனர். இணைந்த கட்சிகளின் எதிர்ப்புப் பேரணி என்று கூறிக் கொண்டு ஜே.வி.பி. தனது கட்சியின் செல்வாக்கைப் பெரிது படுத்துவதாகவே இச்செயல் அமைவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# நாட்டை மீட்டெடுப்பதை விடுத்து ஈழம் அமைய அரசு துணைபோகிறது

## -ஜே.வி.பி.குற்றச்சாட்டு

"நாட்டையும் மக்களையும் அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்குப் பதிலாக விடுதலைப்புலிகள் தனித் தமிழீழம் அமைப்பதற்கு இவ்வரசு துணைபோகிறது" இவ்வாறு ஜே.வி.பி.யின் பிரச்சார செயலர் விமல் விரவன்ச அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். மேலும் அந்த அறிக்கையில் தெரியவருவதாவது, சமாதானம் என்று கூறிக்கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் புலிகள் அங்கிருந்து பல்வகையான நவீன கருவிகளைக் கொண்டு வருகின்றனர். அண்மையில் சிறியரக விமானம் தயாரிக்கக் கூடிய உபகரணங்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வடபகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் உள்நாட்டு,வெளிநாட்டு ஊடகவியலாளர்களையும் அழைத்து வந்து புலிகளின் அரசியல் ஆலோசகர் கிளிநொச்சியில் நீதிமன்றத்தைத் திறந்து வைத்துள்ளார். பளைப்பிரதேசத்தில் தமிழீழ வங்கி திறந்து வைக்கப்பட்டுள்ளது. அங்கு அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்துக்கள் தென்னிலங்கை மக்களுக்கு அச்சமளிக்கிறது.

இவற்றை எல்லாம் கண்டும் இவ்வரசாங்கம் மௌனம் சாதிக்கிறது. எனவே இவ்வரசைத் தோற்கடிப்பதற்கு அனைத்து சக்திகளும் ஒன்றுதிரள வேண்டும். இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

# சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களைக் கொலைசெய்யச் சதி

## சி.ஐ.டி.பொலிசார் விசாரணை

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரையும் அவர்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் சிலரையும் ரகசியமாகக் கொலைசெய்வதற்கு சதி செய்யப்பட்டதாக கிடைத்த தகவலை அடுத்து சி.ஐ.டி பொலிசார் இது தொடர்பாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 20ம் திகதி வவுனியா செட்டிகுளத்தில் மேற்படி புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் கொல்லப்பட்டமையும் அதே தினம் மட்டக்களப்பு கொட்டியாகலப் பகுதியில் மேலும் ஒரு நபரின் வீட்டிற்கு ரசாயனப் பொருள் அடங்கிய கடிதம் கிடைக்கப்பெற்று. உரியவர் கடிதத்தைப் பிரித்த போது ரசாயனப் பொருளினால் மயக்கமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், இது போன்று கல்கிசைப் பகுதியிலும் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவங்களை அடுத்தே சி.ஐ.டி பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பாக்தாத் நோக்கி முன்னேறும் அமெ.படைகளுக்கு கடும் எதிர்ப்பு!

ஈராக் மீதான அமெரிக்க தலைமையிலான கூட்டணிப் படைகளின் தாக்குதல் நேற்று நான்காவது நாளாக நடைபெற்று வருகிறது. மூன்று முனைகளில் இத்தாக்குதல் நடைபெற்று வருகிறது.

பஸ்ரா நகரை நோக்கி தாக்குதல்களுடன் கூடிய படை நகர்வையும் பாக்தாத் நகரை நோக்கி இரு முனைகளிலான படைநகர்வையும் கூட்ட ணிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மும்முனைகளிலும் ஈராக்கிய படையினருக்கும் கூட்டணிப் படையினருக்குமிடையில் நடைபெற்றுவரும் சண்டையில் முன்னூறுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். ஈராக்கியப் படையினரின் தாக்குதல்களில் அமெரிக்காவின் ஐந்து விமானங்களும், இரண்டு உலங்கு வானூர்திகளும், 16 தாங்கிகள், கவச வாகனங்கள்என்பன அழிக்கப்பட் டுள்ளதாக ஈராக்கிய உப சனாதிபதி அறிவித்துள்ளார்.

ஈராக்கிய படையினர் பல அமெரிக்க-பிரிட்டிஷ் படையினரை பிடித்துள்ளதாகவும் அவர்களை தொலைக்காட்சியில் காண்பிக்க தயாராய் இருப்பதாகவும் அறிவித்துள்ளதோடு, அமெரிக்க தலைமையிலான கூட்டணிப் படையினர் தம்மிடம் அகப்பட்ட 76 ஈராக்கிய பொதுமக்களை சித்திரவதை செய்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதேவேளை தம்முடைய ஐந்து விமானங்களும், இரண்டு உலங்கு வானூர்திகளும் அதில் பயணித்த படையினரும், விமானிகளும் காணாமல் போயுள்ளதாக அமெரிக்க படையதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஈராக்கிய தகவல்துறை அமைச்சர் தெரிவிக்கையில்: அமெரிக்கப் படையினர் புதைகுழி ஒன்றில் சிக்கியுள்ளார்கள். அங்கிருந்து அவர்கள் உயிருடன் வெளியேற முடியாது. உக்காஸ்ரர் நகரில் அமெரிக்கப்படையினர் பொறியில் மாட்டியுள்ளார்கள். அவர்களுக்கு ஈராக்கிய படையினர் பாடம் புகட்டி வருகின்றனர். அமெரிக்கர்கள் நுழையும் ஒவ்வொரு ஊரிலும் அவர்கள் தாக்குதலைச் சந்திப்பார்கள் எனத் தெரிவித்த அவர், அமெரிக்காவின் விமான மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களினால் பஸ்ரா நகரில் 72 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு 160 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் அமெரிக்கப் படையினர் பாக்தாத்தில் மேற்கொண்ட தாக்குதலில் 106 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். உக்காஸ்ரர் நகரில் எதிரிப்படைகளின் தாக்குதல்களில் 8 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் என்றதுடன் பஸ்ரா நகரில் குடிநீர் விநியோகம், மின்சார விநியோகம் என்பன துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

மேலும் அமெரிக்கப் படையினரின் முன்னேற்றத்தையும் ஈராக் அமைச்சர் மறுக்கவில்லை.

## பிரிட்டிஷ் போர் விமானத்தை அமெ. ஏவுகணை சுட்டு வீழ்த்தியது!

பிரித்தானிய விமானப்படையின் ஜெற் விமானமொன்ற அமெரிக்கப்படைகள் சுட்டு வீழ்த்தியுள்ளன. குவைத் - ஈராக் எல்லையில் நேற்று அமெரிக்க பெற்றி யாட் ஏவுகணையால் தவறுதலாக இவ் விமானம் சுட்டுவீழ்த் தப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ரொனாடோ ஜி.ஆர்.4 விமானம் தாக்குதலை நடத்திவிட்டு குவைத் எல்லைக்குள் புகுந்தபோது இவ்விமானம் சுட்டுவீழ்த்தப்பட்ட தாக பிரித்தானிய விமானப்படைப் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார். இந்த விமானத்திலிருந்த இரு விமானிகளும் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை. அமெரிக்கப்படை யினர் சிலர் ஈராக் யுத்தத்தின்



ஜி.ஆர் 4 ரகவிமானம்


போது ஈராக்கிய படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டொனால் ரம்ஸ் பெல்ட் தெரிவித்தார். 10ற்கும் உட்பட்ட படையி னரே இவ்வாறு ஈராக்கியப் படைகளிடம் சிக்கியிருக்கலாம் என அமெரிக்க விமானப்படை ஜெனரல் றிச்சார்ட் மெயேஸ் தெரிவித்துள்ளார்.

## அவுஸ்திரேலிய அணி உலகக் கிண்ணத்தை வென்றது!



8ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் நேற்று அவுஸ்திரேலிய அணி இந்திய அணியைத் தோற்கடித்து உலகக் கோப்பையை சுவீகரித்துக் கொண்டது.

ஜோகன்னஸ்பேர்க் வொன்டரஸ்ட் மைதானத்தில் நடைபெற்ற மேற்படி இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் கங்குலி அவுஸ்திரேலியாவை துடுப்பாடப் பணித்தார். துடுப்பாட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 359 என்ற கடின வெற்றி இலக்கை நிர்ணயித்தது.




துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் பொன்டிங் 140 ஓட்டங்களையும், மாட்டீன் 83 ஓட்டங்களை ஆட்டம் இழக்காது பெற்றதுடன் கில்கிறிஸ்ட் 57 ஓட்டங்களையும் பெற்றார்.

பந்து வீச்சில் வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்டுக்களையும் சுழற்பந்து வீச்சாளர் கர்பஜன்சிங் பெற்றுக் கொண்டார்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடத்தொடங்கிய இந்திய அணி 39.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சேவாக் 83 ஓட்டங்களையும், ராவிட் 42 ஓட்டங்களையும் பெற்று துடுப்பாட்டத்தில் ஓரளவு பிரகாசித்தனர். பந்துவீச்சில் மெக்ராத் 3 விக்கெட்டுக்களையும், பிரெட்லி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக பொன்டிங்கும், உலகக்கிண்ண தொடர் ஆட்ட நாயகனாக சச்சின் டென்டுல்கரும் தெரிவாகினர்.

2003 உலகக்கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி சுவீகரித்ததன் மூலம் உலகக் கிண்ணத்தை மூன்றாவது தடவையாக கைப்பற்றிய முதல் நாடு என்ற சாதனையை அவுஸ்திரேலியா நிலைநாட்டிக் கொண்டது.

## சிறிலங்காப் பிரதமர் ரணில் யாழ். இற்குச் செல்வார்

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமையை நேரில் அறிவதற்காகவே அவர் அங்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் சகிதம் யாழ்ப்பாணம் செல்லவுள்ள பிரதமர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அரசாங்க அதிகாரிகள் மற்றும் படை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கான பிரதமரின் விஜயம் புத்தாண்டுக்கு முன்னர் இடம் பெறுமென்று பிரதமர் செயலகத்துடன் நெருங்கிய வட்டாரங்களை ஆதாரம் காட்டிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு சனவரிமாதத்திலும் பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

## மோதலில் 15 பேர் காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐந்துலாம்புச்சந்தி பெரிய பள்ளிவாசல் பகுதியில் நேற்று முன்தினம் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் வசித்துவரும் இரு பகுதியினருக்கிடையே இடம்பெற்ற இம் மோதலில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு பதட்டம் நிலவியதையடுத்து அங்கு விரைந்த சிறிலங்காப் பொலிசார் மோதலில் ஈடுபட்டவர்களை சமரசப்படுத்த முயன்றனர். இது பயனளிக்காததால் அப்பகுதி காவலரணிலிருந்த படையினர் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத்தீர்த்தனர். இதனையடுத்து மோதலில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர்.

இந்த மோதல் சம்பவங்கள் குறித்து மனிதநேய அமைப்புக்களும் சமாதான விரும்பிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

சமாதான சூழ்நிலையில் சில தீயசக்திகளின் பின்னணியில் நடைபெறும் இத்தகைய சம்பவங்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## - வடமராட்சி கிழக்கு கரையோரத்தில் -
## நான்கு வெளிநாட்டவர் சடலம் சிறிலங்காப் பொலிசாரால் மீட்பு!

முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது தாக்குதலுக்கு இலக்கான சீனப் படகில் இருந்து காணாமல் போனவர்களில் நான்கு பேரின் சடலங்களை சிறிலங்காப் பொலிசார் மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

நான்கு சடலங்களும் குடத்தனை மற்றும் பருத்தித்துறை கடற்கரையில் கரையொதுங்கியிருந்ததாக பருத்தித்துறை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த நான்கு சடலங்களும் வெளிநாட்டவர்களின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் நான்கு சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணையை உடன் ஆரம்பிக்க விசேட பொலிஸ் குழு ஒன்று குறிப்பிட்ட பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## இரு மன்னார் மீனவர்கள் கடற்படையால் கைது!

(மன்னார்)

மன்னாரிலிருந்து இரண்டு படகுகளில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து மீனவர்கள் மத்தியில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமன்னாருக்குச் சென்று மீனவர்களின் கைது குறித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பின் போது மன்னார் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

### யாழ்....

அரசியல் பாதகமான இந்த நடவடிக்கை குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்னாலுள்ள யாழ். மாநகர சபையின் வளாகத்திலும் அதை அண்மித்த பகுதிகளிலும் சிறிலங்காப் படையினரின் மிதிவெடி அகற்றும் பிரிவினர் மிதிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பகுதியில் படைமுகாமை அமைக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே படையினர் இவற்றை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாநகர சபை அலுவலகத்திற்குச் சென்ற படை உயர் அதிகாரி ஒருவர் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள அரச காணிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டியதோடு வரைபடங்களையும் யாழ். மாநகரசபை செயலாளரிடமிருந்து பெற்றுச் சென்றுள்ளார்.

### கண்காணி....

மாவட்டத்தளபதிகள் மற்றும் பொலிஸ் உயரதிகாரியையும் சந்தித்தார். அங்கிருந்து விரைவுப் படகுமூலம் மூதூர் சென்று, அங்கிருந்து கண்காணிப்புக்குழு மூலம் சம்பூருக்குச் சென்று புலிகளைச் சந்தித்தார்.

### நவீன...

என்பது இன்று எத்தனையோ அழிவுகளில் இருந்து மீள் எழுச்சிபெற்று வருகிறது.

வன்னியில் போரின் மத்தியில் இருந்து அதற்கு முகம் கொடுத்த எமது மக்களை வெளியில் இருந்து வருவோர் பார்த்து வியப்படைகின்றனர். எங்கள் மக்களின் போராட்ட வெற்றியைக் கண்டு அதிசயிக்கின்றனர். நாம் மக்களுக்கு அறிவியல் ரீதியில் ஆற்றல்களை வழங்க ஆர்வமாக இருக்கின்றோம்.

எமது அமைப்பின் பல துறைகளுடாக கணினிக் கற்றல்களை செயற்படுத்தவுள்ளோம். அத்தடன் வெளிநாட்டில் இடம் பெயர்ந்தவர்களும் எமக்கு கணினிஅறிவுகளை வழங்கத் தயாராகவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.